TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029147

1. District / மாவட்டம் : சேலம். PS / காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு சேலம். Year / ஆண்டு: 2018 FIR No. / மு.த.அ. எண்: 1/AC/2018 Date / நாள்: 01.01.2018.

2. (i) Act சட்டம்: இ.த.ச. Sections பிரிவுகள்: 102.
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988. Sections பிரிவுகள்: 7 & 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: – Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from / நாள் முதல் : 30/12/2017 Date to / நாள் வரை : –
   Time Period : நேர அளவு — Time from / நேரம் முதல் : 1600 மணி Time to / நேரம் வரை : 23.00 மணி.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.01.2018 Time / நேரம் : 1700 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol I. Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — நம்பத் தகுந்தவரின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவல் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 3 கி.மீ கிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி — சேலம் மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம். இரண்டாவது தளம். அறை எண் 201.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திருமதி. K. தமிழ்முல்லை (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு. P. தனசேகர்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5/5/1965 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் — துணை ஆய்வுக் குழு அலுவலர். (g) Address : முகவரி — சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. S. கணேசன், மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) சேலம் மண்டலம் (2) திரு J. நாகராஜன், செயல் அலுவலர் (பொறுப்பு) பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், சேலம். (3) திரு. S. [illegible], தற்காலிக பணியாளர், பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் சேலம் (4) திருமதி. M. சாந்தி, பதிவறை எழுத்தர், சேலம் பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம். சேலம். (5) T.R. சரவணகுமார், உதவியாளர், பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

விபரம் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/1/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/1/18.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் திரு. S. சந்திரமௌலி, காவல் துணைக் கண்காணிப்பாளர்
Rank: நிலை ஊரக மாவட்டம், சேலம். No. எண் ……….

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01. 01. 2018 / 2000hrs.

சமர்பிக்கப்படுகிறது

01.01.2018ம் தேதி பிற்பகல் 1700 மணிக்கு திருமதி. K.தமிழ்முல்லை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு.

அனுப்புதல், திருமதி.K.தமிழ்முல்லை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம். பெறுதல், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் உள்ள அறை எண் – 201 இயங்கவரும் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் மண்டல உதவி இயக்குநர் மற்றும் அலுவலர்கள் சேலம் மணடலத்தில் உள்ள பேரூராட்சிகளின் செயல் அலவலர்களிடமிருந்து மாதாந்திர மாமுல் பெற்றுவருவதாகவும், தற்போது புத்தாண்டையொட்டி புத்தாண்டு சிறப்பு மாமுலாக பெருமளவில் லஞ்சம் பெறுவதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 30.12.2017தேதி மாலை 04.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை நான், சேலம் டவுன் வருவாய் ஆய்வாளர் திரு.V.சேகர் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து மேற்படி சேலம் மண்டல பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டோம். மேற்படி தணிக்கையின் போது மண்டல உதவி இயக்குநர் அவர்களின் அறையில் தணிக்கை மேற்கொண்டதில், அங்கு அமர்ந்து இருந்த நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரும் படைவீடு பேரூராட்சியின் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலருமான (1) திரு.M.ஆறுமுகம் அவர்களிடம் விசாரணை செய்தபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் வெளிபாக்கெட்டிலிருந்து ரூ.20,000/– மற்றும் அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.20,000/–மும் மொத்தம் ரூ.40,000/– மும் அவர் அருகில் அமர்ந்து இருந்த (2) திரு.B.ராஜசேகரன், செயல் அலுவலர், பரமத்தி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து அவரது பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் இருந்த பிரவுன் கலர்

கவரில் இருந்து ரூ.60,000/– மற்றும் அவரது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டில் இருந்து ரூ.11,000/–மும் அக மொத்தம் ரூ.71,000/– மும், அதன் பின்னர் அங்கு அமர்ந்து இருந்த (3) திருமதி.S.கோமதி, செயல் அலுவலர், மோகனூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து வர்த்தமான் ஜீவல்லர்ஸ் அம்மூர், 632501 என்ற சிறிய ரெக்ஸின் கைப்பையில் வைத்திருந்த பிரவுன் கலர் அரை கவரிலிருந்து ரூ.67,600/– மற்றும் மேற்படி கைப்பையில் இருந்து ரூ.17,500/–ம், ஆக மொத்தம் ரூ.85,100/–ம், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (4) திரு.M.இளங்கோ, செயல் அலுவலர், பிள்ளாநல்லூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து அவரது சட்டையின் இடதுபக்க உள் பாக்கெட்டில் இருந்து ரூ.11,000/–மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (5) திருமதி.S.கீதா, செயல் அலுவலர், பொத்தனூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து சிறிய ரெக்சின் மணிபர்சில் இருந்த பிரவுன் கவரில் இருந்து ரூ.31,000/– மற்றும் அதே பையில் தனியாக ஒரு பிங்க் கலர் கவரில் இருந்து ரூ.4,000/–ம் ஆக மொத்தம் ரூ.35,000/–மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (6) திருமதி.மல்லிகை சுந்தரம், செயல் அலுவலர், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து பேரூராட்சிகள் துறை என்று தலைப்பிடப்பட்டு நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் என்று அடியிலும், பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகள் என்று நடுவிலும் பிரிண்ட் செய்யப்பட்ட துணிப் பையில் இருந்து தனித்தனியே ரூ.20,000/–, ரூ.18,000/– மற்றும் ரூ.13,500/–ம் ஆக மொத்தம் ரூ.51,500/–மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (7) திருமதி.கிருஷ்ணவேனி, செயல் அலுவலர், இராபுதுப்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் அவர்களிடமிருந்து NTC என்றும் national textile corporation ltd, (A Govt.OF IINDIA UNDETAKING) 35–B, SOMASUNDARAM MILLS ROAD, COIMBATORE-641009 என்ற ஆங்கிலத்திலும் அதே விபரங்கள் ஹிந்தியிலும் இருபக்கமும் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற பாலிதீன் பையில் இருந்த ஒரு பிங் கலர் கவரிலிருந்து ரூ.5,500/–மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (8) திரு.பி.ஆர்.திருநாவுக்கரசு வெண்ணந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் சேந்தமங்கலம் பேரூராட்சியின் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் அவர்களிடமிருந்து அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.32,000/– மற்றும் அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.35,000/–ம் ஆக மொத்தம் ரூ.67,000/–மும், மேலும்

அங்கு அமர்ந்து இருந்த (9) வெங்கரை பேரூராட்சி செயல் அலுவலரான திரு.பி.பாஸ்கரன் அவர்களின் அவரது சட்டையின் இடது பக்க வெளி பாக்கெட்டில் இருந்து ரூ.7,500/—மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (10) மல்லசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.K.அப்துல்லா அவர்களிடமிருந்து அவரது சட்டையின் இடது பக்க வெளிப் பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு பிங்க் கலர் அரை கவரில் இருந்து ரூ.41,000/—மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (11) மல்லசமுத்திரம் பேரூராட்சிகளின் தொழில் நுட்ப உதவியாளர் (தற்காலிகம்) திரு.N.இளங்கோ அவர்களிடம் பேரூராட்சிகள் துறை என்று தலைப்பிடப்பட்டு மல்லசமுத்திரம் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் என்று அடியிலும், பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகள் என்று நடுவிலும் பிரிண்ட் செய்யப்பட்ட துணிப் பையில் இருந்து ரூ.72,500/—மும், மேலும் அங்கு அமர்ந்து இருந்த (12) சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக உதவியாளர் திரு.டி.ஆர்.செந்தில்குமார் அவர்களிடம் இருந்து அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.12,690/—மும் மேலும் அங்கு அமர்திருந்த (13) சேலம் மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.S.கண்ணன் அவர்களிடம் இருந்து அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு பிரவுன் கலர் அரைக்கவரிலிருந்து ரூ.5,000/—மும், சட்டையின் இடது பக்க வெளிப்பாக்கெட்டிலிருந்து ரூ.10,000/—மும் மற்றும் அவர் அமர்ந்து இருந்த அவரது இருக்கையின் மீது போடப்பட்டிருந்த துண்டின் அடியில் இருந்த ஒரு பிரவுன் கலர் கவரில் இருந்து ரூ.1,00,000/—மும், அவரது இருக்கைக்கு முன் போடப்பட்டிருந்த மேஜையின் இடதுபக்க மேல் டிராயரினுள் வைக்கப்பட்டிருந்த மூன்று பிரவுன் கலர் கவர்களில் ஒரு கவரில் இருந்து ரூ.90000/— மும், அடுத்த கவரில் இருந்து ரூ.1,20,000/— மும், மற்றொரு கவரில் இருந்து ரூ.42,000/— மும் ஆக மொத்தம் ரூ.3,67,000/— மும் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட செயல் அலுவலர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகைகள் பற்றி அவர்களிடம் விசாரணை செய்தபோது அவர்களில் சிலர் மேற்படி தொகைகளை சேலம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திரு.எஸ்.கண்ணன் அவர்களுக்கும், மேற்படி உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் அலுவலர்களுக்கும் மற்றும் அலுவலக செலவுகளுக்கும் கொடுப்பதற்காக மேற்படி மண்டல உதவி இயக்குநர் திரு.எஸ்.கண்ணன் அவர்கள் கேட்டதன் பேரில் கொண்டு வந்ததாகவும், உதவி இயக்குநர் அவர்களின் கூட்டம்

முடிந்தபிறகு மேற்படி உதவி இயக்குநர் திரு.கண்ணன் அவர்களிடம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாகவும், மற்றும் சிலர் மேற்படி தொகைகளை தாங்கள் வைத்திருப்பதற்கு சரியான முகாந்திரம் சொல்லததாலும், அவர்கள் சொன்ன காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும் மேற்படி தொகைகள் இந்நடவடிக்கையின் போது மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் மண்டல உதவி இயக்குநர் அவர்களின் அறைக்கு மேற்கு பக்கம் உள்ள அலுவலக ஹால் மற்றும் கேபின்களில் சோதனை மேற்கொண்டதில் (1) கணிணி அறை கேபினுள் இருந்த கணிணி ஆப்ரேட்டர் திரு.நாகலிங்கம் அவர்களிடமிருந்து அவரது சட்டையின் இடதுபக்க வெளிப்பாக்கெட்டிலிருந்து ரூ.8,660/– மற்றும், அவரது கணினியின் CPU-வின் பின்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிரவுன் கவரில் இருந்து ரூ.15,000/–ம் ஆக மொத்தம் ரூ. 23,660/–மும் (2) அலுவலக ஹாலில் உள்ள பதிவறை எழுத்தர் திருமதி.சாந்தி அவர்களின் கேபினில் குப்பைகள், பழைய பேப்பர்களுக்கு இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த பிரவுன் கவரில் இருந்து ரூ.1,70,000/–கைப்பற்றப்பட்டது. கணினி ஆப்பரேட்டர், திரு.நாகலிங்கத்திடம் அவர் வைத்திருந்த ரூ.23,660/– குறித்து விசாரணை செய்தபோது அவர் அலுவலத்திற்கு வந்த செயல் அலுவலர்கள் புத்தாண்டு அன்பளிப்பாக தனக்க கொடுத்த தொகை என்று தெரிவித்தார். பதிவறை எழுத்தர் திருமதி.சாந்தியிடம் அவரது கேபினுக்குள் பழைய பேப்பர் குப்பைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.1,70,000/–த்தை குறித்து கேட்டபோது அவர் தணிக்கை குழுவினர் மண்டல உதவி இயக்குநர் அறையில் தணக்கையில் ஈடுபட்டிருந்தபோது தான் ரெஸ்ட் ரூம் சென்றிருந்தபோது அலுவலகத்தில் உள்ள யாரோ அந்த தொகையை தனது அறைக்குள் கொண்டு வந்து மறைத்து வைத்துவிட்டார்கள் என்று தெரிவித்தார். இது குறித்து அவ்வலுவலகத்தில் ஆஜரில் இருந்த அவ்வலுவலகத்தின் நிர்வாக பொறுப்பு அலுவலரான தேர்வுநிலை செயல் அலுவலர் நிர்வாகம் திரு.நாகராஜன் அவர்களை விசாரணை செய்தபோது அவர் அந்த ரூ.1,70,000/– தொகையானது அவ்வலுவலக பதிவறையில் உள்ள பழைய பேப்பர் குப்பைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். இந்த விவரங்கள் இந்த திடீர் தணிக்கையின்போது தயார்செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண். ஆ.கு.அ.எண்.68/2017 நாள்.30.12.2017 மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட செயல் அலுவலர்கள், தொழில்நுட்ப உதவியாளர், மண்டல உதவி

இபக்குநர் மற்றும் அவ்வலுவலக அலுவலர்கள் ஆகியோரின் வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.10,60,450/- மற்றும் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். இந்த நிகழ்வுகள் குறித்து உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd.(xxxxx), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம்.

Sir Received the complaint and the enclosures and registered a case in Salem Vigilance and Anti corruption Crime.No.1/AC/2018, u/s 102 Cr.PC and Sec. 7 and 13(2) r/w 13(1)(d) of PC Act 1988 on 01.01.2018 at 1800 hrs and took up investigation Sd.(xxxxx) 1.1.18 S.Chandramouli, Dy.Supdt.,of Police, Vigilance and Anti Corruption, Salem.

Original FIR along with the original typed complaint of Tmt.K.Tamilmullai, Dy.Inspection Cell officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Hon'ble Special Court for Trail of cases and Prevention of corruption Act, Salem and a copy of FIR submitted to the Director, V&AC, Chennai-16.

1/1/18.

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
SALEM-4